


# வன்முறையிலிருந்து மீண்டு வாழுதல்

கொள்கை சுருக்கம் survivingviolence.org

## "வளையத்துள் சிக்கி"

தமிழ்நாட்டில்  வன்முறையிலிருந்து மீண்டு வாழுதலும், அனுதினத்துக்குமான மீள்திறனும்.




2022 ஊடக பகுப்பாய்வு தரவுகளின்படி, இந்தியாவின் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழ்நாட்டின் பாலின வன்முறை குறிப்பீடுகள் மாறுபட்ட கதையினை விவரிக்கின்றன. [1]

2021ஆம் ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டை சார்ந்த பெண்கள் தாங்கள் தங்களுடைய கணவர்களாலும், உறவினர்களாலும் கொடுமைப்படுத்தப்பட்டதாக 875 புகார்களை பதிவு செய்துள்ளனர். [2] 281 வரதட்சணை வழக்குகளையும், 27 வரதட்சணை மரண வழக்குகளையும் பதிவு செய்துள்ளனர். குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005ன் கீழ், ஒரே ஒரு வழக்கு மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவே இந்த சட்டம் குறித்த விழிப்புணர்வின்மையின் குறிப்பீடாகும்.

## சூழமைவு

கடந்த தேசிய குடும்ப சுகாதார ஆய்வின் நான்கு பதிப்புகளின்படி, ஆண்கள் பெண்களை அடிப்பதற்கு ஒரு நியாயமான காரணமாவது இருக்கிறது என்று பாதிக்கும் மேற்பட்ட திருமணமான ஆண்களும், பெண்களும் நம்புகிறார்கள்; ஆண்களை விட பெண்களே இதனை அதிக அளவில் தொடர்ந்து நம்புகிறார்கள். (NFHS 5, 2019 -21) இறுதி சுற்று கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களில், 79.8% பெண்களும், 53.8% ஆண்களும் இவ்வாறு கூறியுள்ளனர். [3] குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களின் உதவி நாடல் தொடர்பான தேடல்களையே எங்களுடைய ஆய்வு மையமாக கொண்டுள்ளது. 2019 -21ல் கணக்கெடுக்கப்பட்ட பெண்களில் 81.1% சதவிகிதத்தினர் யாரிடமும் உதவி கேட்கவோ, தாங்கள் அனுபவிக்கும் வன்முறையை பற்றி சொல்லவோ இல்லை. கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில் தான் எங்களுடைய ஆய்வும் நடைபெற்றது. உதவியை நாடியவர்களில் பெரும்பாலானோர் தங்களுடைய பிறந்த வீட்டினரிடமே உதவியை நாடினர் (81.6%); ஏனையோர் அண்டை வீட்டாரிடம் (15.7%); நண்பர்களிடம் (10.9%) மற்றும் கணவரின் குடும்ப உறவினர்களிடம் (10.4%) நாடினர். [4]

இத்தகைய சூழமைவில், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டோர்- மீண்டு வாழ்வோர் மேற்கொண்ட உதவிக்கான தேடல்களை, அவர்களின் அனுபவங்களின் மூலம் புரிந்து கொள்ள எங்கள் ஆய்வை வடிவமைத்தோம். அந்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் ஆதரவு சேவை புரியும் தொழில்முறை நிபுணர்களால் எங்களுக்கு விரிவான சூழமைவு வரையறுக்கப்பட்டது.

# வன்முறை மற்றும் அதனை சமாளிக்கும் அனுபவம்



எங்கள் ஆய்வில் நேர்காணல் செய்யப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும்- குடும்ப வன்முறையிலிருந்து மீண்டு வாழ்பவர்கள், சமூகத்தின் உறுப்பினர்கள், ஆதரவு சேவை புரிவோரின்  (தன்னார்வ தொண்டு அமைப்புகள், பாதுகாப்பு அதிகாரி போன்ற ஆதரவு சேவை புரியும் அரசு அலுவலர்கள்; வழக்கறிஞர்கள்; சுகாதார பாதுகாப்பு வல்லுநர்கள் மற்றும் காவல்துறையினர்) குடும்ப வன்முறை பற்றிய வரையறைகளானது, சட்டத்திலுள்ள விரிவான வரையறையினை பரந்த அளவில் பிரதிபலிக்கின்றன. (குடும்பத்தினுள் பெண்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகள் - உடல் ரீதியான, பாலியல் ரீதியான, வாய்மொழி ரீதியான, உணர்ச்சி ரீதியான அல்லது பொருளாதார ரீதியான வன்முறைகள்). அனைத்து வகையான வன்முறைகளும் நேர்காணல்களில் காணப்பட்டாலும், வாய்மொழி மற்றும் பொருளாதார வன்முறை மிகவும் பொதுவானதாக அனைத்து நேர்காணல்களிலும் காணப்பட்டது. வன்முறையிலிருந்து மீண்டு வாழ்வோர், பாலியல் வன்முறை குறித்து பேச மிகவும் தயங்கினார்கள். இருப்பினும், அவர்களில் இருவராவது, தாம்பத்திய நெருக்கமின்றி விலகுவதை, வன்முறையின் வடிவமாக அடையாளம் கண்டுள்ளனர்.

'மௌனம்' மிகவும் பொதுவான வன்முறையை சமாளிக்கும் வழிமுறையாகும். வன்முறையை எதிர்பார்த்து, அந்த இடத்தை விட்டு வெளியேறுவது மற்றொரு வகை. வன்முறையை தூண்டாமல் இருக்க முயல்வது மூன்றாம் வகை. சிறிய எண்ணிக்கையிலான பெண்கள், சத்தமாக கத்துவது, திரும்ப சண்டையிடுவது பற்றியும் பேசியுள்ளனர். சிலர், அவர்களின் குழந்தைகள் தலையிட்டு வன்முறையை தடுத்துள்ளதாகவும் கூறியுள்ளனர். பொதுவாக பிறந்த வீட்டு குடும்ப உறவுகளுடன் இருப்பது, துன்புறுத்துபவரின்றி குழந்தைகளுடன் இருப்பது பாதுகாப்பான இடங்களாக விவரிக்கப்பட்டுள்ளது.

இந்த தரவு, வன்முறையிலிருந்து மீண்டு வாழ்பவருக்கும், சேவை வழங்குநர்கள் உட்பட அவர்களை சுற்றியுள்ளவர்களுக்கும் இடையேயான புரிதலிலுள்ள இடைவெளியை காட்டுகிறது. ஆகையால் முன்முடிவு இல்லாமலோ, வன்முறை சூழலில் அனுசரித்து வாழ்வதற்கான அறிவுரை அற்றோ, அவர்களுக்கு உதவி கிட்டும் வாய்ப்பு மிகவும் அரிது.

<table>
<tr><th colspan="7">படம் 1: குடும்ப வன்முறை மற்றும் சட்டம் பற்றிய நம்பிக்கைகள்</th></tr>
<tr><th></th><th colspan="2">வன்முறையிலிருந்து மீண்டு வாழ்பவர் (59)</th><th colspan="2">சமூக உறுப்பினர்கள் (30)</th><th colspan="2">ஆதரவு சேவை புரிவோர் (62)</th></tr>
<tr><th></th><th>Number</th><th>%</th><th>Number</th><th>%</th><th>Number</th><th>%</th></tr>
<tr><td>குடும்ப வன்முறை, ஒரு குற்றச் செயல், அது குற்றவியல் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டும்.</td><td>49</td><td>83</td><td>22</td><td>73</td><td>38</td><td>61</td></tr>
<tr><td colspan="7">83% வன்முறையிலிருந்து மீண்டு வாழ்வோரும், 73% சமூக உறுப்பினர்களும் குடும்ப வன்முறை குற்றம் என்று நினைக்கிறார்கள். ஆனால், நீதி பெற்று தரும் பொறுப்பில் இருப்போரின் மத்தியில் இந்த எண்ணிக்கை வெறும் 61% சதவீதமே! இத்தகைய பின்னடைவு, நீதியை நேரடியாய் பெற்று தரும் பொறுப்பில் இருக்கும் இரண்டு பிரிவினரிடம் காணப்படுகிறது – வழக்கறிஞர்கள் (8/13)மற்றும் காவல் அதிகாரிகள் (5/9) அவ்வாறு இல்லை என்று நம்புகிறார்கள்.</td></tr>
<tr><td>குடும்ப வன்முறை என்பது குடும்ப விவகாரம், அது குடும்பம் தாண்டி வெளியில் செல்ல கூடாது,</td><td>7</td><td>12</td><td>10</td><td>33</td><td>4</td><td>6.5</td></tr>
<tr><td colspan="7">சமூக உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர், குடும்ப வன்முறை அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்படுவதை விரும்பவில்லை என்பது உதவி நாடுவதற்கான சுமூகமான சூழலை ஏற்படுத்தவில்லை.</td></tr>
<tr><td>குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்கு, உள்ளூர் அதிகாரி அல்லது காவல் துறை அதிகாரிகளிடமிருந்து பாதுகாப்பு கோரும் உரிமை இருக்கிறது.</td><td>54</td><td>91.5</td><td>24</td><td>80</td><td>54</td><td>87</td></tr>
<tr><td>குடும்ப வன்முறை குற்றவாளிகளை கைது செய்து, குற்றவியல் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.</td><td>46</td><td>78</td><td>17</td><td>57</td><td>34</td><td>55</td></tr>
<tr><td colspan="7">ஏறக்குறைய 80% வன்முறையிலிருந்து மீண்டு வாழ்பவர்கள், தங்களை துன்புறுத்தியவர் கைது செய்யப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். 57% சமூக உறுப்பினர்களும், 55% ஆதரவு சேவை வழங்குவோரும் ஆழமான தெளிவின்மையால் இதிலிருந்து மாறுபடுகிறார்கள். நாங்கள் சந்தித்த வழக்கறிஞர்களில் பாதிக்கும் மேற்பட்டோர், ஒன்பது காவல்துறை அதிகாரிகளில் நான்கு பேர் இவ்வாறே நினைக்கிறார்கள்.</td></tr>
<tr><td>குடும்ப வன்முறை நடந்தால், பாதிக்கப்பட்டோர் (அ) இதர குடும்பத்தார் அதனை அதிகாரிகளிடம் முறையிட உரிமை உண்டு.</td><td>55</td><td>93</td><td>27</td><td>90</td><td>52</td><td>84</td></tr>
<tr><td>குற்றவாளி குடிபோதையில் இருந்தால், குடும்ப வன்முறை மன்னிக்கத்தக்கது.</td><td>5</td><td>8.5</td><td>6</td><td>20</td><td>3</td><td>5</td></tr>
<tr><td>குற்றவாளி வேலை பளு (அ) பண நெருக்கடியினால் மன அழுத்தத்தில் இருந்தால், குடும்ப வன்முறை மன்னிக்கத்தக்கது</td><td>7</td><td>12</td><td>12</td><td>40</td><td>8</td><td>13</td></tr>
<tr><td colspan="7">தங்களை சுற்றியுள்ளவர்கள், குடிப்பழக்கம் மற்றும் மனஅழுத்தத்தினால் குடும்ப வன்முறை நிகழ்ந்தால் அது மன்னிக்கத்தக்கதே என்று எண்ணும் சூழலில், பாதிக்கப்பட்டோர் உதவியை நாடுவது மிகவும் கடினம், மற்றொரு புறம், ஆதரவு சேவை வழங்குநர்கள் அவ்வாறு எண்ணவில்லை என்றாலும் கூட.</td></tr>
<tr><td>குடும்ப வன்முறை நிகழ்வதை பார்க்கும் குழந்தைகளும் பாதிக்கப்படுகின்றனர்</td><td>57</td><td>97</td><td>30</td><td>100</td><td>55</td><td>89</td></tr>
<tr><td>குடும்ப உறவில் வன்முறை நிகழ கூடியது தான், அதனை சமாளிக்க கூடிய வழியை பாதிக்கப்பட்டோர் கண்டறிய வேண்டும்.</td><td>13</td><td>22</td><td>11</td><td>37</td><td>13</td><td>21</td></tr>
<tr><td colspan="7">குடும்ப வன்முறை தவிர்க்க இயலாதது; அதனை முற்றிலும் ஒழிப்பதை விட சமாளித்து வாழ்வதே சிறந்தது என்று பாதிக்கப்பட்டோர் மற்றும் சேவை வழங்குநர்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் மற்றும் சமூக உறுப்பினர்களில் கிட்டத்தட்ட பாதிக்கும் மேலான சதவிகிதத்தினர் கருதினர். சேவை வழங்குநர்களில், ஐந்து நபர்கள் அரசாங்க அமைப்பில் பணிபுரிபவர்கள்.</td></tr>
<tr><td>சட்ட ரீதியான தலையீட்டால் வன்முறையை தடுக்க முடியும்.</td><td>48</td><td>81</td><td>20</td><td>67</td><td>51</td><td>82</td></tr>
<tr><td>மனைவியோ, இணையரோ வீட்டு வேலைகளை சரிவர செய்யவில்லை என்றால், குடும்ப வன்முறை மன்னிக்கத்தக்கது.</td><td>0</td><td>0</td><td>0</td><td>0</td><td>1</td><td>1.6</td></tr>
<tr><td colspan="7">இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, ‘சேவை வழங்குநர்கள்’ என்பது இவர்களை குறிக்கிறது - NGOகள் (நிபுணர்களும், ஏனையோரும்); வழக்கமாக உதவிக்கு அணுகப்படும் பாதுகாப்பு அதிகாரி மற்றும் ஒருங்கிணைந்த சேவை மையம் மற்றும் சமூக நல அலுவலர்களை உள்ளடக்கிய அரசு அலுவலர்கள்; செவிலியர்கள் மற்றும் மருத்துவர்களை உள்ளடக்கிய சுகாதார நிபுணர்கள்; வழக்கறிஞர்கள் மற்றும் காவல் துறையினர்.</td></tr>
</table>



# ஆதரவு சூழலமைப்பு

| படம் 2: வன்முறையிலிருந்து மீண்டு வாழ்வோரின் கூற்றுப்படி, அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர்கள் | |
|---|---|
| தாய் | 37 |
| சகோதரி | 21 |
| தந்தை | 21 |
| நண்பர் | 13 |
| சமூக அமைப்புகள் | 10 |
| சகோதரன் | 10 |
| **பிற*** | **9** |
| அமைப்பின் உதவி எண் | 7 |
| குழந்தைகள் | 6 |
| போலீஸ் | 6 |
| மைத்துனர்/மாமன் | 5 |
| பாதுகாப்பு அதிகாரி | 5 |
| சட்ட நிபுணர்கள் | 4 |
| மாமனார் | 3 |
| அண்ணி/மைத்துனி | 3 |
| மதம் சார்ந்த நபர் | 3 |
| சுய உதவி குழுக்கள் | 3 |
| கணவர் | 2 |
| மாமியார் | 2 |
| மருத்துவர் | 2 |
| பெண் உறவினர் (கஸின்) | 1 |
| மொத்த பதில்கள் | 58 |

** பிற: 181 உதவி எண் (2); ஒருங்கிணைந்த சேவை மையம் (OSC) (2); கஸின்ஸ்; பைபிள், தாத்தா, கணவரை பணியமர்த்தியவர், இயேசு; ஆண் கஸின், மாமா*

ஆதரவு சூழலமைப்பானது, பாதிக்கப்பட்டோர்-மீண்டு வாழ்வோரின் உதவிக்கு முறைசாரா மற்றும் முறைசார்ந்த ஆதரவு வழங்குநர்களை கொண்டுள்ளது. முறைசாரா வழங்குநர்கள், முறையான பயிற்சி மேற்கொள்ளாத, அங்கீகரிக்கப்படாதவர்கள். இருப்பினும் அவர்கள் பாதிக்கப்பட்டோரின் உதவி நாடும் பயணத்தில் பகுதியாக திகழ்கின்றனர். முறையான வழங்குநர்கள், அரசு அல்லது அரசு சாராதவராக இருக்கலாம். ஆனால் அவர்களின் தொழில்முறை பயிற்சி (அ) சட்டபூர்வமான நிலைப்பாடு, பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்குவதற்கான அங்கீகாரத்தை அளிக்கிறது.

முறைசாரா ஆதரவு சூழலமைப்பானது, குடும்பம், அண்டை வீட்டார் மற்றும் நண்பர்கள்; மத சமூகத்தை சார்ந்த மத போதகர்கள், ஜமாத் தலைவர்கள்; சாதி பஞ்சாயத்துகள்; கிராம பஞ்சாயத்து; பெரும்பாலான என்.ஜி.ஒக்கள் போன்றோரை உள்ளடக்கியுள்ளது. தமிழ்நாட்டில் முறையான ஆதரவு சூழலமைப்பானது, பாதுகாப்பு அதிகாரி, ஒருங்கிணைந்த சேவை மையம், மாவட்ட சமூக நல அலுவலர், ஆட்சியர் அலுவலகம், முதல்வரின் சிறப்பு செல் (முதல்வரின் அலுவலகத்துக்கான நேரிடை தொடர்பு எண்) காவல்துறைமற்றும் நீதிமன்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

# உதவி தேடலிலுள்ள தடைகள்

உதவி நாடுவதற்கான முடிவு எடுப்பது, அதற்குப்பின் உதவியை நாடுவதற்கான வழிமுறைகளை அறிவது, இவ்விரண்டும் அவர்களுக்கு பெரும் தடைகள்.

நேர்காணல் செய்யப்பட்ட வன்முறையிலிருந்து மீண்டு வாழ்வோரில் பெரும்பாலானோர், தங்களின் வன்முறை அனுபவங்களை பகிர்ந்து கொள்ள பல மாதங்கள் காத்திருந்தனர். வன்முறையை சாதாரண நிகழ்வாக நினைக்கும்படி வளர்க்கப்பட்டு, தங்கள் சூழலுக்கு ஏற்றவாறு அனுசரித்து வாழ பழக்கப்படுத்தப்பட்டிருப்பது, அவர்களை யாரிடமும் உடனடியாக சொல்லவிடாமல் தடுக்கிறது. அவர்களின் குடும்பத்தை எதிர்த்து தனக்கான துணைவரை தேர்ந்தெடுத்திருந்தால், தங்கள் கணவரால் நேரும் வன்முறையை பற்றி வெளியில் பகிர்ந்து கொள்ள அவர்கள் தயங்கினார்கள். மிகவும் இளம் மணப்பெண்கள் தங்களுக்கு நேர்வது, வன்முறை தான் என்று புரிந்து கொள்ளவில்லை. பெரும்பாலானோர், தங்கள் உடன்பிறந்தோரின் திருமணம், பெற்றோரின் உடல்நலம் மற்றும் பொருளாதார நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு பிறந்த வீட்டார் மீது மேலும் பாரம் சுமத்த தயங்கினார்கள். மேலும் வன்முறையால் பாதிக்கப்பட்டவராகவோ, திருமண பந்தம் முறிவுற்றவராகவோ களங்கப்படுத்தப்படுவோமோ என்ற தயக்கம் அவர்களிடம் காணப்பட்டது.
இந்த பெண்கள், துன்புறுத்தலை தாங்கி கொள்ளும் வரம்பு வரையிலும், மேற்கூறிய காரணங்களுக்காக மௌனமாக இருந்தார்கள். அத்தகைய வரம்பினை, நேர்காணல் செய்யப்பட்ட ஒவ்வொருவரும் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ குறிப்பிட்டனர். துன்புறுத்தப்படுவதை பொருட்படுத்தாமல், பெண்கள் தங்கள் குடும்பத்துடனேயே வாழ வேண்டும் என்ற அவர்களின் அனுசரித்து செல்லும் தன்மையை அங்கீகரித்தனர் சமூக உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர். மேலும், பெண்கள் அற்பமான காரணங்களுக்காக புகார்கள் கூறுவதாக இவர்கள் தெரிவித்தனர்.

வன்முறையை தாங்கி கொள்ளும் வரம்பு என்பது பல்வேறு காரணிகளால் குறிக்கப்பட்டுள்ளது. வன்முறையிலிருந்து மீண்டு வாழும் சிலருக்கு, வாய்மொழி ரீதியான வன்முறையிலிருந்து உடல் ரீதியான வன்முறையாய் அதிகரிப்பதாய் அது இருந்தது. வேறு சிலருக்கோ, இது கொடூரமான உடல் ரீதியான வன்முறையாகவும் இருந்தது. திருமணத்திற்கு புறம்பான தொடர்புகளால் ஏற்படும் நம்பிக்கை துரோகம் மட்டுமல்லாது இதனால் மனைவியை கைவிடுவதும், குடும்பத்தை கைவிடுவதும், பல பெண்களுக்கு உடையுநிலையாக அதுவே அமைந்தது. இந்த குடும்ப வன்முறையால் குழந்தைகள் பாதிக்கப்பட தொடங்கும் போது, பெண்கள் உதவியை நாட தொடங்கினர்.

# உதவி தேடும் பயணத்தில் ஏற்படும் தடைகள்

தன்னம்பிக்கை, விழிப்புணர்வு, வருவாய் இல்லாததே, பெண்கள் வன்முறையான குடும்ப சூழலிலிருந்து வெளியேற தடைகளாக இருந்தன. தாங்கள் வன்முறையை அனுபவிப்பதை அவமானமாக பெண்களை கருத வைக்கிறது ஆணாதிக்க கலாச்சாரம். இதனால் அவர்கள் இதனை பற்றி பேசுவதற்கோ, பகிர்ந்து கொள்ளுவதற்கோ துணிவதில்லை. பிறந்த குடும்பத்திற்கு பாரமாக இருப்பதற்கு தயக்கம் காட்டுவதை தாண்டி, அவர்களின் ஆதரவு எவ்வளவு கிட்டும் என்பதும் இப்பெண்களுக்கு உறுதியாக தெரியவில்லை. சில பெண்களுக்கு, வன்முறை என்பது தனது பெற்றோர், உடன்பிறதோரிடமிருந்து வலுகட்டாயமாக தனிமைப்படுத்தப்படுவதாய் அமைகிறது. கூடுதலாக, தங்களையும், தங்கள் குழந்தைகளையும் எவ்வாறு காப்பாற்றுவது; குழந்தைகளின் படிப்பு, அவர்களின் வருங்காலம்; நீதிமன்ற நடைமுறைகளுக்கு ஆகும் செலவுகள் என்று அவர்கள் பலவிதமாய் கவலைப்பட்டார்கள். நீதிமன்றங்களும் வழக்குகளை மிக மெதுவாகவும், முடிவில்லாத உத்தரவுகள் மற்றும் மேல்முறையீடுகளால் செயல்படுவது, நிவாரணம் மற்றும் புதிய வாழ்க்கைக்காக காத்திருக்கும் பெண்களுக்கு துன்பகரமான விளைவுகளையே இது தருவித்தது. கோவிட் 19, இப்பெண்கள் இயங்குவதற்கே சவால்களை தருவித்தது. அவர்கள் தங்களின் வன்முறையாளருடன் சேர்ந்து அடைப்பட நேர்ந்தது; அதனால் அவர்கள் தங்கள் குடும்பத்தாரிடமோ, ஆதரவு சேவை வழங்குநர்களிடமோ தொலைப்பேசியில் தொடர்பு கொள்ள இயலவில்லை.

# நீதிக்கான வழி

பெண்கள் தங்களது பிறந்த குடும்பத்தினரையே முதலில் அணுகினர். இதனால் இதர குடும்பத்தினர் ஈடுபடுத்தப்பட்டு சமரச பேச்சு வார்த்தை நடைபெற்றது. மேலும் பாதிரியார், ஜமாத், நாட்டாம்மை, பஞ்சாயத்து அல்லது அரசியல் தலைவர்களும் இதர மத்தியஸ்தர்களாக அறியப்பட்டனர். நிரந்திரமாகவும், முற்றிலுமாகவும், வன்முறையை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வர இவர்களால் இயலவில்லை.

கலவையான விளைவுகளுடன், அதிகமான வன்முறையை எதிர்கொண்ட தருணங்களில் தான் பெண்கள் காவல்துறையை அணுகுகிறார்கள். நேர்காணல் செய்யப்பட்டோரில் பெரும்பான்மையோர், காவலர்கள் வழக்கு பதிவு செய்ய தயக்கம் காட்டுவதையே குறிப்பிட்டனர். வன்முறையாளர்கள் போதையில் இருப்பதை ஒரு சாக்காக கொண்டு அவர்களை காவலர்கள் விடுவிப்பதாக வன்முறையிலிருந்து மீண்டு வாழும் பெண்கள் பலர் கூறினர். காவலர்கள் கணவர் வீட்டாருடன் இயைந்து, இப்பெண்களை சமரசமாய் செல்ல ஆலோசனை வழங்குவதாகவும் கூறப்பட்டது. எவ்வாறாயினும், உடைமைகளை மீட்டு தருதல், குழந்தைகளை தாயுடன் கொண்டு சேர்த்தல் போன்ற உதவிகளை காவல்துறையினர் செய்தனர் என்றும் பகிரப்பட்டது.

அனைத்து விமர்சனங்களையும் கொண்டிருந்தாலும், நீதியை பெறுவதற்கு வெளிப்படையான, அணுகக்கூடிய இடமாக காவல்துறை உள்ளது. வன்முறையிலிருந்து மீண்டு வாழ்வோர், தங்களுக்கு கிடைக்காத உரிமைகள், அவர்களுக்கான உரிமைகள் பற்றி தெளிவாக பேசினாலும், குடும்ப வன்முறைக்கு எதிரான சட்டங்கள், உதவிக்கு அணுக கூடிய வழிகளை பற்றி அதிகமாக அறியாதவர்களாகவே இருந்தார்கள். நீதிமன்ற செலவுகள், ஒவ்வொரு வழக்கு தேதிகளிலும் ஊதிய இழப்பு என்று பல தடைகளை பெண்கள் சந்தித்தனர்.

வழக்கறிஞர்கள் எளிமையான வழக்குகளை சிக்கலாக்க முனைவதாகவும், சம்பந்தப்படாத உறவினர்களை குற்றப்பத்திரிகையில் சேர்ப்பதற்கு பெண்களை ஊக்குவிப்பதாகவும், நீதிமன்ற நடவடிக்கைகளை இழுத்தடிப்பதாகவும் பாதுகாப்பு அதிகாரி, காவல்துறையினர் போன்ற அரசு சேவை வழங்குநர்கள் குறிப்பிட்டனர். பாதுகாப்பு அதிகாரிகள், ஆணைகள் அமலாக்கப்படாததோ, அத்து மீறப்படுவதோ தண்டிக்கப்படவில்லை என்று வருத்தப்பட்டனர். பெண்களுக்கு சிறிய அளவிலான நிதி நிவாரணமாவது எளிதில் கிடைத்து விடும் ஆனால் நீதி அல்ல, என்று நேர்காணல்களின் கருத்துக்கள் தெரிவிக்கின்றன.

# பெண்கள் என்ன விரும்பினார்கள் , அவர்களுக்கு என்ன கிடைத்தது!

வன்முறையிலிருந்து மீண்டு வாழும் பெண்களில் குறைந்த எண்ணிக்கையிலானவரே, தங்களது கணவர்கள் சீர்திருந்தி, சமரசமாய் தங்களுடன் இணைந்து வாழ விரும்புவதாக கூறியுள்ளனர். தங்கள் கணவர்கள் அவர்களின் தகாத உறவினை உதறி விட்டு தங்களுடன் திரும்பி வர வேண்டும் என்றனர். பெரும்பாலான பெண்கள் சமரசத்தையே நாடுகின்றனர் என்று அரசு சேவை வழங்குநர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் போலீசார் கூறியதற்கு நேர்மறையாக இது உள்ளது. பெண்களுக்கு தேவைப்படும் உதவி கிடைக்க வேண்டும் என்று நாங்கள் நேர்காணல் செய்த வன்முறையிலிருந்து மீண்டு வாழும் பெரும்பான்மையோர் கூறினர். அவர்கள் தங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், வன்முறையாளர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று விரும்பினர். பெரும்பான்மையோர், தங்களையும், தங்கள் குடும்பத்தையும் ஆதரித்து கொள்ளுவதற்கு நிதி சுதந்திரமே தங்களுக்கு தேவையான பலன்களாக தெரிவித்தனர். கடைசியாக, அவர்கள் மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் இருப்பதே அவர்களின் விருப்பமாக மீண்டும் மீண்டும் தெரிவித்தனர்.

வலுவான ஆணாதிக்க கலாச்சாரம், சமூக மற்றும் அரசு அமைப்புகளில் ஊடுருவி, கருத்துக்களில் ஆழமாய் உட்பொதிந்துள்ளது. இதனால் உறவுகளில் வன்முறை நிகழ்வது இயல்பானதாக எடுத்து கொள்ளப்படுகிறது. இந்த போக்கு, வன்முறையிலிருந்து மீண்டு வாழ முற்படுவோர், நீதியை பெற அணுகுவோர், தங்களுது வாழ்க்கையை மறுசீரமைப்போருக்கு இடையூறுகளை ஏற்படுத்துகிறது.



## பரிந்துரைகள்

சிறந்த சட்டங்கள் மட்டுமே போதாது என்பதை இந்த ஆய்வு வலுப்படுத்துகிறது. வன்முறையிலிருந்து மீண்டோர், புதிய, வன்முறையற்ற வாழ்க்கையை நோக்கி பயணிக்க உதவ வேண்டும். அதற்காக, உறவுகள், இல்லங்கள், பொது இடங்களில் காணப்படும் ஆணாதிக்க வன்முறையை தவிர்த்து, அதிலிருந்து மீளும் சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அப்படியிருக்கும் பட்சத்தில், சட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மூன்று பகுதிகளில் முன்னேற்றம் தேவை.

1. பாலினம் குறித்த விழிப்புணர்வு: இது சேவை வழங்குநர்களுக்கு மிகவும் தேவை. தவிர, பொதுவாக, வன்முறையையும், சமத்துவமின்மையையும் இயல்பாக்கும் கருத்துகளையும், மதிப்புகளையும் மாற்றியமைக்க இது தேவைப்படுகிறது.

2. நெருக்கடி கால ஆதரவு சேவைகளின் மேம்பாடுகள்: சேவை வழங்குநர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது (உதாரணத்திற்கு, பாதுகாப்பு அதிகாரி); அவர்கள் சிறந்து பணிபுரிவதற்கான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சேவைகளை ஒருங்கிணைத்தல் ஆகியவை இதில் அடங்கும்.

3. நிதி அதிகாரமளித்தல்: சமூக நல துறையினால் நிர்வகிக்கப்படும் குறுகிய கால உதவி தொகையை பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு வழங்கலாம்; இடைநிலை உதவியாக அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கான பயிற்சி, நீண்ட கால வேலை திறனை வளர்ப்பதற்கான பயிற்சியையும் அடங்கிய கல்வியினை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

## ஆதாரங்கள்

(1) ராஜ் செங்கப்பா, "ஸ்டேட் ஆப் தி ஸ்டேட்ஸ் 2022 சர்வே | பெஸ்ட் பெர்பாமிங் பிக் ஸ்டேட்: தமிழ் நாடு" இந்தியா டுடே, டிசம்பர் 21, 2022, https://www.indiatoday.in/magazine/cover-story/story/20221226-state-of-the-states-2022-survey-best-performing-big-state-tamil-nadu-2309684-2022-12-17 January 3, 2023 அன்று குறிக்கப்பட்டது.
(2) நேஷனல் க்ரைம் ரெகார்ட்ஸ் பீரோ, க்ரைம் இன் இந்தியா, https://ncrb.gov.in/en/crime-in-india செப்டம்பர் 14, 2022 அன்று குறிக்கப்பட்டது.
(3) இண்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் பார் பாபுலேசன் சயின்சஸ், நேஷனல் பாமிலி ஹெல்த் சர்வே -5, தமிழ்நாடு 2019-21, டேபிள் 102, பக்கம் 176, http://rchiips.org/nfhs/NFHS-5Reports/Tamil%20Nadu.pdf ஆகஸ்ட் 27, 2022 அன்று குறிக்கப்பட்டது
(4) இண்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் பார் பாபுலேசன் சயின்சஸ், நேஷனல் பாமிலி ஹெல்த் சர்வே -5, "தமிழ்நாடு" 2019-21, டேபிள்110, பக்கம் 180, http://rchiips.org/nfhs/NFHS-5Reports/Tamil%20Nadu.pdf ஆகஸ்ட் 27, 2022 அன்று குறிக்கப்பட்டது.

# வன்முறையிலிருந்து மீண்டு வாழுதல்

## தொடர்பு

இந்த கொள்கை சுருக்கத்தை எழுதியவர் தமிழ்நாட்டின் பிராஜெக்ட் தலைவர் ஸ்வர்ணா இராஜகோபாலன். இதனை தமிழில் மொழிபெயர்த்தவர் சுடரொளி. அனைத்து புகைப்படங்களும் பிரியதர்ஷிணி ரவிச்சந்திரனால் இந்த பிராஜெக்ட்டுக்காக சிறப்பாக எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த சுருக்கத்தின் உள்ளடக்கங்கள் பற்றியோ, பிராஜெக்ட் பற்றியோ மேலும் அறிந்து கொள்ள (அ) எங்களை தொடர்பு கொள்ள, இந்த இணைய தளத்தை சுட்டுங்கள் www.survivingviolence.org